©
தமிழ்நாடு அரசு
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 36] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 8, 2021
ஆவணி 23, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 90, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டு (I2)த் துறை நாள் : 28 ஜூன் 2021]*

1982ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 6ஆம் பிரிவைச் சேர்ந்த (3) மற்றும் (5) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு பின்வரும் உறுப்பினர்களை இதனால் நியமனம் செய்கிறார். அதாவது:–

**அ. அரசுப் பிரதிநிதிகள் :–**

| | | |
|---|---|---|
| 1. | திரு.பொன் குமார் | தலைவர் |
| 2. | தொழிலாளர் நல ஆணையர், சென்னை – 600 006. | உறுப்பினர் |
| 3. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,<br>சென்னை – 600 009. | உறுப்பினர் |
| 4. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>நிதித் துறை,<br>சென்னை – 600 009. | உறுப்பினர் |
| 5. | அரசு முதன்மைச் செயலாளர்,<br>வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,<br>சென்னை – 600 009. | உறுப்பினர் |
| 6. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>பொதுப்பணித் துறை,<br>சென்னை – 600 009. | உறுப்பினர் |
| 7. | அரசு முதன்மைச் செயலாளர்,<br>நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை,<br>சென்னை – 600 009. | உறுப்பினர் |
| 8. | இயக்குநர்,<br>தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்,<br>சென்னை – 600 032. | உறுப்பினர் |

9. மண்டல தொழிலாளர் நல ஆணையர் (மத்திய அரசு), சாஸ்திரி பவன், நுங்கம்பாக்கம், சென்னை – 600 006. — உறுப்பினர்

## ஆ. வேலையளிப்பவர்களின் பிரதிநிதிகள் :–

1. தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை – 600 035. — உறுப்பினர்

2. தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை – 600 005. — உறுப்பினர்

3. தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைகள் துறை, சென்னை – 600 005. — உறுப்பினர்

4. தலைமைப் பொறியாளர், பொதுப்பணிகள் துறை, சேப்பாக்கம், சென்னை – 600 005. — உறுப்பினர்

5. ஆணையாளர், நகராட்சி நிர்வாகம், ராஜா அண்ணாமலை புரம், சென்னை – 600 028. — உறுப்பினர்

6. திரு.டி.பதாம் துகார், தலைவர், இந்திய வீட்டு மனை மேம்படுத்துவோர் சங்கங்களின் கூட்டமைப்பு (CREDAI), சென்னை, 8E, சென்சுரி பிளாசா, 526, அண்ணா சாலை, சென்னை. — உறுப்பினர்

7. திரு.ஆர்.சிவக்குமார், மாநிலத் தலைவர், இந்திய கட்டுமான உரிமையாளர்கள் சங்கம், எண்.14/1, வ.உ.சி. நகர் 2ஆவது தெரு, அண்ணா நகர் கிழக்கு, சென்னை – 600 102. — உறுப்பினர்

8. திரு.எல்.சாந்தகுமார், தலைவர், தென்னக மையம், இந்திய கட்டுமான உரிமையாளர்கள் சங்கம், எண்.3சி, 3ஆவது தெரு, டாக்டர் பி.என்.சாலை, தி.நகர், சென்னை – 600 017. — உறுப்பினர்

9. திரு.எ.ஷாஜகான் சயீத், மேலாண்மைப் பங்குதாரர், எம்.கே.எம்.எஸ். கட்டுமான நிறுவனம், எண்.23, சேமியர்ஸ் சாலை, நந்தனம், சென்னை – 600 035. — உறுப்பினர்

## இ. உடலுழைப்புத்தொழிலாளர்களின் பிரதிநிதிகள் :–

1. திரு.ஜே.பழனி, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை (LPF), அரசு மருத்துவமனை வழி, அரூர் அஞ்சல், அரூர் வட்டம், தர்மபுரி மாவட்டம். — உறுப்பினர்

2. திருமதி.எஸ்.தமிழ்ச்செல்வி, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை (LPF), மகாலட்சுமி வணிக வளாகம், முதல் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், நாமக்கல் – 637 003. — உறுப்பினர்

3. திரு.பி.சி.எத்திராஜ், உறுப்பினர்
தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை (LPF),
எண்.13/14A, நபிகள் நாயகம் தெரு,
புதுப்பாளையம், கடலூர் – 607 001.

4. திரு.கே.ரவி, உறுப்பினர்
துணைப் பொதுச் செயலாளர்,
அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) ,
எண்.2/1, கோவூர் வைத்தியநாதன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை – 600 002.

5. திரு.டி.குமார், உறுப்பினர்
இந்திய தொழிற்சங்க மையம் (CITU),
செயற்குழு உறுப்பினர்,
எண்.6, சாஸ்திரி நகர், 3ஆவது தெரு,
வடக்கு குமரநந்தபுரம்,
திருப்பூர் – 641 602.

6. திரு.கே.வெங்கடேசன், உறுப்பினர்
மாநில செயலாளர்,
மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணி (MLF),
எண்.386/1, 6ஆவது தெரு, சக்தி நகர்,
செங்கல்பட்டு.

7. திரு.வி.மகேஸ்வரன், உறுப்பினர்
மாநில செயலாளர்,
அகில இந்திய அமைப்பு சாரா பணியாளர்கள் காங்கிரஸ், (AIUWC),
எண்.4, யாதவாள் முதல் குறுக்குத்தெரு,
விருகம்பாக்கம், சென்னை – 600 092.

8. திரு.ஜே.சீதாராமன், உறுப்பினர்
இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (INTUC),
எண்.30, கிழக்கு தெரு,
ஒதியாடிகுப்பம், வெள்ளக்கரை,
கடலூர் வட்டம், கடலூர் மாவட்டம்.

9. திரு.கே.பேரறிவாளன், உறுப்பினர்
மாநில பேரவை அமைப்பாளர்,
தொழிலாளர் விடுதலை முன்னணி,
எண்.52/36, பஜனை கோயில் தெரு,
மங்களாபுரம், அம்பத்தூர், சென்னை – 600 098.

**இரா. கிர்லோஷ் குமார்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (ப) எண் . 267, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை நாள்: 12.07.2021]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதப்பட்டுள்ள பின்வரும் வரைவு அறிவிக்கை, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b)பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால், பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன காலஅளவு முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிடமிருந்து இது குறித்து வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை – 600 006 – இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக அரசுச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 09.03.2016ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் II, பிரிவு – 2இல் 171 மற்றும் 172ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.வே/188/2016 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு அதற்கு பதிலாகவும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் காளான் வளர்ப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**காளான் வளர்ப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண் (1)* | *பணியாளர்களின் வகைகள் (2)* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) (3)* | | |
|---|---|---|---|---|
| | | *மண்டலம்–1 (ரூ.காசு)* | *மண்டலம்–2 (ரூ.காசு)* | *மண்டலம்–3 (ரூ.காசு)* |
| | **வகைப்பாடு எண்.1** | | | |
| | மேற்பார்வையாளர்கள் | 11678.00 | 11596.00 | 11514.00 |
| | **வகைப்பாடு எண்.2** | | | |
| (1) | கணக்காளர் | 10041.00 | 9959.00 | 9878.00 |
| (2) | மின் கம்மியர் | | | |
| (3) | போப்காட் (Bobcat) இயக்குபவர்கள் | | | |
| (4) | வளர்ப்பவர்கள் | | | |
| | **வகைப்பாடு எண்.3** | | | |
| (1) | ஓட்டுநர்கள் | 8895.00 | 8814.00 | 8732.00 |
| (2) | ஆய்வக தொழில்நுட்பப் பணியாளர் | | | |
| (3) | பயிற்சி பெற்ற பணியாளர்கள் | | | |
| | **வகைப்பாடு எண்.4** | | | |
| (1) | பயிற்சி பெறாத பணியாளர்கள் | 6849.00 | 6654.00 | 6572.00 |
| (2) | காவலாள் | | | |

| *தொடர் எண்* <br><br><br><br> *(1)* | *பணியின் வகைகள் மற்றும் பணியாளர்களின் வகைப்பாடு* <br><br> *(2)* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (நாளொன்றுக்கு) (ரூ.காசு)* <br> *(3)* |
|---|---|---|
| (1) | அடுக்கு அமைக்கும் தொழிலாளர்கள் (டர்னிங்–I, டர்னிங்–II, டர்னிங்–III) | |
| (2) | பங்கர் இயக்குதல் (பங்கர்–I, பங்கர்–II, பங்கர்–III) | 253.00 |
| (3) | காளான் கருவிழையைக் கலக்குதல் | |
| (4) | பிளஸ்சிங் (Flussing) செய்முறை | |
| (5) | பெட்டியில் அடைத்தல் | |
| (6) | பறித்தல் | |
| (7) | சிப்பம் செய்தல் | |
| (8) | நீர் விடுதல் | |
| (9) | நிரப்புதல் | |
| (10) | ஏனைய பொதுவான தொழிலாளர்கள் (மேற்சொன்ன யாதொரு வகைப்பாட்டின் கீழும் இடம்பெறாத தொழிலாளர்கள்) | |

**விளக்கங்கள்.–(1)அகவிலைப்படி:–** (i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகளாகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் மாதமொன்றுக்கு ரூ.40.80 (நாற்பது ரூபாய் எண்பது காசு மட்டும்) கூடுதலாக அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, அகவிலைப்படியின் முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**(2) மண்டலங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்:–**

(i) மண்டலம்–1 – அனைத்து மாநகராட்சிகள் மற்றும் அனைத்து நகராட்சிகளைக் கொண்டிருக்கும்

(ii) மண்டலம் –2 – அனைத்து நகரியங்கள், மூன்றாம் தரநிலை நகராட்சிகள் மற்றும் பாளையங்கள் ஆகிய பகுதிகளைக் கொண்டிருக்கும்

(iii) மண்டலம்–3 – மேலே குறிப்பிடப்பட்டுள்ள மண்டலம் 1 மண்டலம் 2 பகுதிகளின் கீழ் வராத பிற பகுதிகள் இதில் அடங்கும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது , ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட, மாதாந்திர ஊதிய வீதங்களை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(5) மாதாந்திர ஊதிய வீதங்களைக் கணக்கிட, நாள் ஊதிய வீதங்களை 30ஆல் பெருக்க வேண்டும்.

(6) மொத்த ஊதிய தொகுப்பானது, (அதாவது அடிப்படை ஊதியங்கள் + அகவிலைப்படி) இந்த அறிவிக்கை இணக்க செயல்நோக்கத்திற்கான அளவுகோலாக இருக்கும்.

(7) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**இரா. கிர்லோஷ் குமார்,**
*அரசு செயலாளர்.*

//தமிழாக்கம்//

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை( ப) எண் . 317. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(J1) த் துறை நாள் :27. 07. 2021.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை– 600 006– இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11 / 1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 09.03. 2016 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** பாகம் II பிரிவு 2 இல் 169 மற்றும் 170 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II (2) தொ.வே /186/2016 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் முந்திரித் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**முந்திரித் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண் (1)* | *பணியின் வகைகள் மற்றும் தொழிலாளர்கள் (2)* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (3)* |
|---|---|---|
| (1) | தோடு உடைத்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 26.82 |
| (2) | தோல் உரித்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 31.28 |
| (3) | முந்திரிப் பருப்புத் துண்டுகளில் தோல் நீக்குதல், ஓடு உடைத்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 31.28 |
| (4) | தரம் பிரித்தல் | |
| | (i) உடையாத வெள்ளை பருப்புகள் | விளக்கங்களின் (2) ஆம் இனத்தில் குறிப்பிட்டுள்ள வேலை ஒன்றுக்கு ரூ. 196.88 |
| | (ii) தீயிலிட்டுச் சுடப்பட்ட உடையாத பருப்புகள், வகைப்படுத்தப்படாத (Desert) உடையாத பருப்புகள், கட்டல், கரி, முந்திரிப் பருப்புத் துணுக்குகள் | |
| | (iii) காரநிறம் பிருவல் | |
| | (iv) புழுக்குத்து, புழுக்குத்துப் பொடி, கைருவல் பொடி, சுட்ட சிறு பருப்புத் துணுக்குகள் | |
| | (v) தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள், தீயிலிட்டுச் சுடப்பட்ட தோடுகள் | |
| | (vi) கட்டல் துணுக்குகள் (பொடி) | |
| (5) | வறுத்தல் | நாளொன்றுக்கு ரூ.317/– |
| (6) | போர்மா பணியாளர் | |
| (7) | எண்ணெய் பிழியும் இயந்திரம் இயக்குபவர் | |
| (8) | தகர வேலை செய்பவர் | |
| (9) | சிப்பம் செய்பவர் | |

| *தொடர் எண் (1)* | *பணியின் வகைகள் மற்றும் தொழிலாளர்கள் (2)* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (3)* |
|---|---|---|
| (10) | (a) மைகாட்<br>(i) மடியினைச் சோதனையிடுவது உட்பட பல்வகைப் பணி.<br>(ii) முந்திரிப்பருப்பினைச் சோதனையிடல்<br>(iii) டப்பாவில் நிரப்புபவர் **(*)**<br>(iv) சமையலாள்<br>(v) பெருக்குபவர் / துப்புரவுப் பணியாளர் | நாளொன்றுக்கு ரூ.277.00 |
| | **(*)** வழக்கமான பணியுடன் டப்பாவினை நிரப்பும் பணியையும் கூடுதலாகச் செய்கின்ற டப்பாவினை நிரப்புவருக்கு, அத்தகைய நாட்களில் மட்டும் நாளொன்றுக்கு ரூ.12.55 கூடுதலாக வழங்கப்படவேண்டும் | |
| | (b) மேற்பார்வையிடும் மைகாட் | நாளொன்றுக்கு ரூ.305.00 |
| (11) | மேற்பார்வையாளர் / மேஸ்திரி / காவலாள் | மாதமொன்றுக்கு ரூ.7618.00 |
| (12) | எழுத்தர் / தட்டச்சர் | மாதமொன்றுக்கு ரூ.7565.00 |

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி :** (i) மாறுகின்ற அகவிலைப்படியானது, 827 என்ற டிசம்பர் 2010 க்கான நாகர்கோயில் மைய நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982 = 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டது.) 827 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாள் ஒன்றுக்கு 33 காசுகள் ( முப்பத்து மூன்று காசுகள் மட்டும்) கூடுதலாக, மாறுகின்ற அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) **மாறுகின்ற அகவிலைப்படி திருத்தமானது,** முறையே ஜனவரியிலிருந்தும் ஜூலையிலிருந்தும் தொடங்குகின்ற முந்தைய ஆறு திங்களுக்கான நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்தும் அக்டோபர் திங்கள் முதல் நாளிலிருந்தும் செயலுக்கு வரும்.

(iii) முதல் கணக்கீடு, மேற்சொன்ன இனம் (ii) – இல் குறிப்பிடப்பட்டுள்ள நாகர்கோயில் மையத்திற்கான நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) **அகவிலைப்படி வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு பணிச்சுமை :**

கீழேயுள்ள விவர அட்டவணையில் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் வகைகளைச் சேர்ந்த பணிகளில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்கள், அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பணியைச் செய்தால் மட்டுமே, மேலே நிர்ணயிக்கப்பட்டவாறான அகவிலைப்படியைப் பெற உரிமையுடையவர்கள் ஆவர்.

| *பணி வகைகள் (1)* | *வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு பணிச்சுமை (2)* |
|---|---|
| (1) தோடு நீக்குதல்/ உடைத்தல் | 6 கிலோ கிராம் |
| (2) தோல் நீக்குதல் | 5 கிலோ கிராம் |
| (3) முந்திரிப் பருப்புத் துண்டுகளில் தோல் நீக்குதல், தோடு உடைத்தல் | 5 கிலோ கிராம் |
| தரம் பிரித்தலில் பல்வேறு வகைகளைச் சேர்ந்த பணிகளைப் பொறுத்தவரையில் பணிச்சுமை | |
| (1) உடையாத வெள்ளை பருப்புகள் | 100 கிலோ கிராம் |
| (2) தீயிலிட்டுச் சுடப்பட்ட உடையாத பருப்புகள், வகைப்படுத்தப்படாத உடையாத பருப்புகள், கட்டல், கரி, தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள் | 14 கிலோ கிராம் |
| (3) கார நிறம் பிருவல் | 10 கிலோ கிராம் |
| (4) புழுக்குத்து, புழுக்குத்துப் பொடி, கைருவல் பொடி, சுட்ட சிறு பருப்புத் துணுக்குகள் | 6 கிலோ கிராம் |

| | |
|---|---|
| (5) தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள், தீயிலிட்டுச் சுடப்பட்ட தோடுகள் | 11 கிலோ கிராம் |
| (6) கட்டல் துணுக்குகள் (பொடி) | 4 கிலோ கிராம் |

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) (i) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(ii) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**இரா. கிர்லோஷ் குமார்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (ப) எண் : 330, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1) த்துறை நாள்: 30.07.2021]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11 / 1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதியுள்ள அறிவிக்கையின் கீழ்காணும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு மாத கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் இந்த வரைவு அறிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் இது தொடர்பாக யாதொரு நபரிடமிருந்து வரப்பெறும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை – 600 006 இல் உள்ள தொழிலாளர் துறை ஆணையாளர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11 / 1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 20.09.2017 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2 – இல் 1 மற்றும் 2 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே/793(b)/2017 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் யாதொரு மலைத்தோட்டத்தில் அதாவது சின்கோனா, ரப்பர், தேயிலை, காஃபி மற்றும் ஏலக்காய் பயிரிடும் நோக்கத்திற்காக பராமரிக்கப்படுகின்ற யாதொரு மலைத்தோட்டத்தில்(ESTATE) பணியமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கு கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**யாதொரு மலைத்தோட்டத்தில் அதாவது சின்கோனா, ரப்பர், தேயிலை, காஃபி அல்லது ஏலக்காய் பயிரிடும் நோக்கத்திற்காக பராமரிக்கப்படுகின்ற யாதொரு மலைத்தோட்டத்தில் வேலைவாய்ப்பு.**

| **பணியாளர்களின் வகைகள்** | **குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (நாளொன்றுக்கு)** | | |
|---|---|---|---|
| | கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவை நீங்கலாக ஏனைய பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்கள் மற்றும் சின்கோனா தோட்டங்கள் . | காஃபி மற்றும் ஏலக்காய் தோட்டங்கள். | கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்கள். |
| (1) | | (2) | |
| | (ரூ.காசு) | (ரூ.காசு) | (ரூ.காசு) |
| உரிய வயதடைந்தவர் | 228.00 | 226.00 | 234.00 |
| வளரிளம் பருவத்தினர் | 154.00 | 153.00 | 158.00 |

**விளக்கங்கள் (1) அகவிலைப்படி** (a) மேற்சொன்ன குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள், 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதன் அடிப்படையாகக்கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகளாகும்.) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது மேற் குறிப்பிடப்பட்ட மலைத்தோட்டங்களில் பணி புரியும் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டவாறு வழங்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| உரிய வயதடைந்த பணியாளர்கள் | ரூ. 1.40 (நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு புள்ளிக்கும் ஒரு ரூபாய் நாற்பது காசுகள்) |
| வளரிளம் பருவ பணியாளார்கள் | நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு புள்ளிக்கு 95 காசுகள். |

(b) சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு முந்தைய இரண்டாம் காலாண்டை தொடக்கமாகக் கொண்டு, ஜூலை, அக்டோபர், ஜனவரி, ஏப்ரல் மாதம் முதல் நாளிலிருந்து முறையே ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் திங்கள் முதல் நாளில் அகவிலைப்படியானது திருத்தியமைக்கப்பட வேண்டும்.

(2) ரப்பர் தோட்டங்களில் ரப்பர்பால் வடிக்கும் பணியாளர்களுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் பின் வருமாறு

(a) உத்தரவாத கால வீதம் – நாளொன்றுக்கு ரூ. 117.50

(b) செய்யும் வேலைக்கேற்ற குறைந்தளவு ஊதியம்

வகை–I (ஏக்கர் ஒன்றுக்கு 113 கிலோகிராம் வரை விளைச்சல்– ஆண்டொன்றிற்கு 0.404686 எக்டேர்) முதல் 1 ½ கிலோகிராம் வரை உலர் ரப்பருக்கு ஒவ்வொரு அரை கிலோகிராமிற்கு ரூ.39.17

வகை–II (ஏக்கர் ஒன்றில் 113 கிலோகிராமிற்கு அதிகமாகவும் 181 கிலோகிராம் வரையிலுமான விளைச்சல் – 0.404686 எக்டேரில்) ஆண்டொன்றிற்கு முதல் 2½ கிலோகிராம் வரை உலர் ரப்பருக்கு ஒவ்வொரு அரை கிலோகிராமிற்கு ரூ.23.50

வகை–III (ஏக்கர் ஒன்றில் 181 கிலோகிராமுக்கு அதிகமாகவும் 272 கிலோகிராம் வரையிலான விளைச்சல் – ஆண்டொன்றிற்கு 0.404686 எக்டேர்) முதல் 4 ½ கிலோகிராம் வரை உலர் ரப்பருக்கு ஒவ்வொரு அரை கிலோகிராமிற்கு ரூ.13.06

வகை–IV (ஏக்கர் ஒன்றுக்கு 272 கிலோகிராமிற்கும் அதிகமான விளைச்சல் – ஆண்டொன்றிற்கு 0.404686 எக்டேர்) முதல் 6½ கிலோகிராம் வரை உலர் ரப்பருக்கு ஒவ்வொரு அரை கிலோகிராமிற்கு ரூ.9.04.

(c) ஏனைய காலமுறை வீத ரப்பர் தோட்ட பணியாளர்களுக்கும் பொருந்தத்தக்கவாறான அகவிலைப்படி.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**இரா. கிர்லோஷ் குமார்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.